11th November 1965]

Madras, thus achieving a considerable reduction in the pendency of cases before the Labour Court at Madras. The additional Labour Court was therefore abolished, as recommended by the High Court on the expiry of its period of sanction of six months, on 10th March 1965.

திரு. ஆ. தங்கவேலு : இந்த லேபர் கோர்ட்டு நீதிபதிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் நான்கு முறை மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டில் லேபர் கோர்ட்டு அடிஷனல் ஜட்ஜூ பதவியேற்று ஒரு மாதம் தான் ஆகிறது. நேற்று அவரை மாற்றிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அடிக்கடி இப்படி நீதிபதிகள் மாற்றப்படுவதால், வழக்குகள் ஏராளமாக பெண்டிங்காக இருந்து, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீதிபதிகள் மாற்றப்படாமல் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர் நீதி மன்றத்தினர் அவசியம் என்று கருதுகிறபொழுது தான் இந்த நீதிபதிகள் மாற்றப்படுகிறார்கள்.

தமிழ் வகுப்புகள்

*467 **கேள்வி.—திரு. கே. எ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத அரசாங்க ஊழியர்களுக்கு தமிழில் அறிவாற்றல் பெற வேண்டி வகுப்புகள் நடத்தப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The instruction classes are being conducted in the following places :—

1. Madras City.
2. Ambattur.
3. Red Hills.
4. Avadi.
5. Thiruvannamalai.
6. Vellore.
7. Ranipet.
8. Cuddalore.
9. Tiruchirappalli.
10. Tirunelveli.
11. Dindigul.

[11th November 1965

12. Oddanchatram.
13. Periakulam.
14. Nagercoil.
15. Vadasseri.
16. Kottar.
17. Thuckalay.
18. Kuzhithurai.
19. Ootacamund.
20. Gudalur.
21. Coimbatore.
22. Erode.
23. Dharapuram.
24. Tiruppur.
25. Chinchona.
26. Salem.
27. Hosur.

ஆட்சி மொழி

* 468 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆட்சி மொழிப் பிரச்னையின் மீது சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதங்கள் மொழிப்பெயர்க்கப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Extracts from the proceedings of the Legislative Assembly and the Legislative Council relating to the discussion of the Official Language issue, with English translations of the Tamil speeches, were sent to the Government of India for being placed before the Home Minister and the Prime Minister.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆங்கில மொழி பெயர்ப்பின் படிகள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுமா என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலம் எதற்காக வழங்க வேண்டும் என்று தெரியவில்லை. அங்கே தமிழ் தெரியாதவர்களுக்கு ஆங்கிலம் அனுப்பியிருக்கிறோம். (திரு. ப. உ. சண்முகம் : டிரான்ஸ்லேஷன் சரியா என்று பார்ப்பதற்குத்தான்). இந்த மன்றம் அப்படி ஒரு 'டெஸ்ட்' வைப்பது என்றால் அப்பொழுது பார்க்கலாம்.